Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

CC.No. 288/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 - - வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால்,Grade-III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | தலைமை காவலர் |
| பெயர். | - | சத்தியராஜ் | வட்டம் | - | உளுந்தூர்பேட்டை |
| த/பெ. | - | செல்வராஜ் | வயது | - | 40 |
| கிராமம் | - | எடைக்கல் | | | |

11.07.2025

எதிரிஆஜர்.

**முதல் விசாரணை**.

1. நான் தற்போது எடைக்கல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.08.2020 ந் தேதி முதல் நிலை காவலராக திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது இரவு 20.30 மணியளவில் அலுவலில் இருந்த போது சந்திரமோகன் நிலைய பாரா அலுவலில் இருந்தார். அப்போது கோவிட் காலம். விசாரணைக்கு நிறைய பேர் வந்திருந்தார்கள். நிலைய பாரா வாசலில் நிற்காதீர்கள், கும்பலாக நிற்காதீர்கள் என்று சொன்னார்.

2. ரவீந்திரன் என்பவர் குடிபோதையிலிருந்து நிலைய பாராவை தெவுடியா பசங்களே என்னடா வேலை பார்க்குறீங்க உள்ளே விடமாட்டீங்களா என்று அசிங்கமாக கேட்டார். அதனால் அவருக்கும், நிலைய பாராவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் சீருடையை கிழித்து முகத்தில் தாக்கினார். நாங்கள் அருகில் இருந்ததால் சண்டையை விலக்கிவிட்டோம். நிலைய பாரா புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்று விட்டார். உதவி ஆய்வாளர் விசாரிக்க நான் நடந்ததை சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் அன்றைக்கு என்ன பணியில் இருந்தேன் என்றால் ஆய்வாளரின் எழுத்தர் பணியில் இருந்தேன். நான் கணினி அறையில் தான் இருப்பேனா என்றால் ஆமாம். அந்த காலகட்டத்தில் கொரணாவின் பாதிப்பு உச்சத்தில் இருந்ததால் கும்பலாக யாரையும் கூப்பிட்டு விசாரிக்க கூடாது

என்றால் சரிதான். அந்த சமயத்தில் விசாரணையை காவல் நிலையத்திற்கு வெளியே அங்கு தான் விசாரித்தார்கள், ஒரு நபரை தான் விசாரித்தார்கள், கும்பலாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

2. சத்தம் கேட்டு தான் வந்து பார்த்தேனா என்றால் ஆமாம். எதிரியும் மற்றவர்களும்எங்கிருந்தார்கள் என்றால் கேட்டிற்கு வெளியில் இருந்தார்கள். கேட்டிற்கு வெளியில் இருந்து தான் கத்தினார்களா என்றால் காவல் நிலைய காம்பவுண்டிற்கு உள்ளே, கிரில் கேட்டிற்கு வெளியே இருந்து கத்தினார். எதிரி மட்டும் கத்தினாரா, 20 பேரும் கத்தினார்களா என்றால் ரவீந்திரன் குடிபோதையில் பிரச்சனை பண்ணி கத்தும்போது அவர்களும் கூட்டமாக இருந்து கத்தினார்கள்.

3. எதிரி எதற்காக கத்தினார், விசாரிக்க சொல்லி கத்தினாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரியை அதன் பிறகு உள்ளே கூப்பிட்டு சென்றோமா என்றால் எதிரி தாக்கினார், அதன் பிறகு விசாரிக்க கூப்பிட்டுச்சென்றோம். எதிரி தாக்கியதை நான் பக்கத்தில் இருந்து பார்த்தேனா என்றால் ஆமாம். நான் பார்க்கும் போது மணி என்ன இருக்கும் என்றால் 20.30.

4. அப்போது அங்கு இருந்தவர்கள் எடையாரை சேர்ந்தவர்களா வெளியூர்காரர்களா என்றால் அது யாரென்று எனக்கு தெரியாது. அதன் பிறகு எதிரி காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தார் என்றால் எதிரி உடல்நிலை சரியில்லை என்று சொன்னதால் கொஞ்ச நேரத்தில் மெமோ போட்டு இரவு 09.00 மணிக்கெல்லாம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள்.

5. எதிரி அந்த ஊர் ஊராட்சி மன்ற தலைவரின் மகன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எடையாரை சேர்ந்த ஒரு பெண் பாதிக்கப்பட்டு, அது சம்மந்தமாக புகார் கொடுத்து, அதை ஏன் விசாரிக்கவில்லை என்று எதிரி கேட்டதற்கு நாங்கள் தான் அவரை அடித்து அவருக்கு எதாவது ஆகிவிடும் என்று பயந்து நாங்கள் தான் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றால் சரியல்ல.

6. எதிரியை மெடிகல் மெமோவில் அனுப்பிவிட்டு உதவி ஆய்வாளரை வைத்து சந்திரமோகனை தாக்கியதாக பொய்யாக வழக்கு போட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 காவலர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.